**இலங்கை திறந்த பல்கலைக்கழகம்**
**முகாமைத்துவ கற்கைகள் பீடம்**

**இளமாணி முகாமைத்துவ கற்கைகள் சிறப்புப்பட்டப்படிப்பு**

**மட்டம் 3**
**AFU 3572 – நுண்பாகப் பொருளியல்**
**இறுதிப் பரீட்சை – 2025 / 2026**
**கால அளவு – மூன்று (03) மணித்தியாலங்கள்**

*திகதி: ஜூன் 28, 2026* — *நேரம்: மு.ப.9.30 – பி.ப12.30*

**அறிவுறுத்தல்கள்:**

- இவ்வினாத்தாள் **ஆறு (06) வினாக்களைக்** கொண்டுள்ளது.
- ஏதேனும் **ஐந்து (05) வினாக்களுக்கு** விடையளிக்கவும். அனைத்து வினாக்களும் சமனான புள்ளிகளை கொண்டவை.
- உங்கள் **சுட்டெண்ணை (Index Number) விடைத்தாளில் மேலே கொடுக்கப்பட்ட இடத்தில்** எழுதவும்.
- இவ்வினாத்தாள் **நான்கு (04) தட்டச்சு** செய்யப்பட்ட பக்கங்களைக் கொண்டுள்ளது.
- விடைத்தாள்களை உங்கள் விடை புத்தகத்துடன் இணைக்கவும்.
- **நிரல்படுத்தப்படாத கணிப்பான்களின் (non-programmable calculator)** பயன்பாடு அனுமதிக்கப்படுகிறது.

**வினா இல. 01**

**A)** **i.** விளக்கப்படங்களைப் (Illustrations) பயன்படுத்தி, 'கேள்வி விதி' (Law of Demand) மற்றும் 'நிரம்பல் விதி' (Law of Supply) ஆகியவற்றுக்கு இடையேயான வேறுபாடுகளை விளக்கவும்.

**ii.** ஒவ்வொரு பண்டத்திற்குமான கேள்வியானது, கேள்வி விதியை உறுதிப்படுத்துமா? விளக்கப்படங்களைப் பயன்படுத்தி விளக்கவும். **(05 புள்ளிகள் x 2 = 10 புள்ளிகள்)**

**B)** பின்வரும் மாற்றங்களானது கொடுக்கப்பட்ட பண்டத்தின் சந்தையில் ஏற்படுத்தும் தாக்கத்தை விளக்கப்படங்களைப் பயன்படுத்தி விளக்கவும்.

**i.** மின்சார வாகன (EV) உற்பத்தித் துறையில் ஒரு குறிப்பிடத்தக்க தொழில்நுட்ப முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது, மின்சார வாகனங்களுக்கான சந்தை.

**ii.** எரிபொருளின் விலையில் பாரிய அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது, மின்சார வாகனங்களுக்கான சந்தை.

**iii.** இறைச்சி உண்பதால் ஏற்படும் பாதகமான உடல்நல பாதிப்புகள் குறித்து மக்கள் அதிகளவில் விழிப்புணர்வு பெற்று வருகின்றனர், இறைச்சிப் பொருட்களுக்கான சந்தை.

**iv.** சீரற்ற வானிலை காரணமாக மீனவர்களுக்கு தங்களது வணிகத்தில் ஈடுபட முடியவில்லை, மீன்களுக்கான சந்தை. **(2.5 புள்ளிகள் x 4 = 10 புள்ளிகள்)**

*"குறிப்பு: ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், இம்மாற்றமானது கேள்வியையா(Demand) அல்லது நிரம்பலையா(Supply) பாதிக்கிறது என்பதை இனங்காணவும்; மாற்றங்களின் விளைவாக சந்தை சமநிலை விலை (Equilibrium market price) மற்றும் சமநிலை அளவு (Equilibrium quantity) ஆகியவற்றில் ஏற்படும் மாற்றத்தின் திசையைக் குறிப்பிட்டு, இம்மாற்றத்தின் காரணமாக சமநிலை விலை மற்றும் சமநிலை அளவு ஆகியவற்றில் ஏற்படும் மாற்றங்களை பொருத்தமான வரைபடங்களைப் பயன்படுத்தி விளக்கவும்."*

<u>**வினா இல. 02**</u>

**A)** **i.** *அ)* பண்டத்தின் தன்மை (The Nature of the good) மற்றும் **ஆ)** பதிலீட்டுப் பண்டங்களின் கிடைப்பனவு (Availability of Substitutes) ஆகியவை ஒரு குறிப்பிட்ட பண்டத்திற்கான விலைசார் கேள்விநெகிழ்ச்சியின் (Price Elasticity of Demand) தன்மையை எவ்வாறு நிர்ணயிக்கும்? உதாரணங்களைப் பயன்படுத்தி விளக்கவும்.

**(06 புள்ளிகள்)**

**ii.** ஒரு நிறுவனத்தின் முகாமையாளர், சந்தைக்கு வழங்கப்படும் பல வகையான பொருட்களின் மூலம் நிறுவனத்திற்கு கிடைக்கும் வருவாயை அதிகரிப்பதற்காக அவற்றின் விலைகளில் மாற்றம் செய்ய விரும்புகிறார். விலைசார் கேள்விநெகிழ்ச்சி குறித்த அறிவு, சரியான தீர்மானங்களை எடுக்க அவருக்கு எவ்வாறு உதவும் என்பதை விளக்கப்படங்களைப் பயன்படுத்தி விளக்கவும். **(06 புள்ளிகள்)**

**B)** நெகிழ்ச்சி எண்ணக்கரு (Concept of Elasticity) பற்றிய அறிவைப் பயன்படுத்தி, பின்வரும் கூற்றுகளுடன் நீங்கள் "உடன்படுகிறீர்களா" என்பதை விளக்கவும்.

**i.** 7up மற்றும் Sprite-க்கு இடையேயான குறுக்குக் கேள்வி நெகிழ்ச்சியின் (Cross Price Elasticity) பெறுமதி மிக அதிகமாக இருக்க வேண்டும்.

**ii.** பொதுப் போக்குவரத்தின் வருமானசார் கேள்வி நெகிழ்ச்சி (Income Elasticity of Demand) குணகம் "- 0.48" என மதிப்பிடப்பட்டுள்ளது, எனவே பொதுப் போக்குவரத்து ஒரு சாதாரண பண்டமாக (Normal Good) கருதப்பட வேண்டும்.

**(08 புள்ளிகள்)**

<u>**வினா இல. 03**</u>

**A)** **i.** ' எண்ணளவு ' (Cardinal) மற்றும் "தர வரிசை' (Ordinal) பயன்பாட்டுப் பகுப்பாய்வின் கீழ் நுகர்வோர் நடத்தை குறித்து மேற்கொள்ளப்படும் முக்கிய அனுமானத்தில் உள்ள வேறுபாடு என்ன? விளக்கவும்.

**(03 புள்ளிகள்)**

**ii.** *"குறைந்துசெல்லும் எல்லைப்பயன் விதி"* (The Law of Diminishing Marginal Utility) என்பதன் பொருள் என்ன? ஓர் விளக்கப்படத்தைப் பயன்படுத்தி விளக்குக.

**(05 புள்ளிகள்)**

**iii.** தேவைப்படும் இடங்களில் விளக்கப்படங்களைப் பயன்படுத்தி, 'எண்ணளவு ' (Cardinal) மற்றும் 'தர வரிசை' (Ordinal) பயன்பாட்டுப் பகுப்பாய்வின் கீழ் நுகர்வோர் சமநிலை (Consumer Equilibrium) எவ்வாறு விளக்கப்படுகிறது என்பதை வேறுபடுத்திக் காட்டவும்.

**(05 புள்ளிகள்)**

**B)** கீழேயுள்ள அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ள விவரங்களைக் கவனத்தில் கொள்ளவும்.

| தொகை | 0 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| TUx | 0 | 36 | 68 | 96 | 120 | 140 | 156 | 168 | 176 |
| TUy | 0 | 48 | 90 | 126 | 156 | 180 | 198 | 210 | 216 |

பண்டம் 'X'-இலிருந்து பெறப்படும் மொத்தப் பயன்பாடு (TUx) மற்றும் பண்டம் 'Y'-இலிருந்து பெறப்படும் மொத்தப் பயன்பாடு (TUy) ஆகும்.

பண்டம் X-இன் விலை ரூ. 4/- மற்றும் பண்டம் Y-இன் விலை ரூ. 3/- ஆகவும், ஒருவரிடம் அவ்விரு பண்டங்களுக்கும் செலவிடுவதற்கு ரூ. 45/- இருப்பதாகவும் கொண்டால், நுகர்வோர் அதிகபட்ச திருப்தியை பெறக்கூடிய அளவுகளைக் (Quantities) கண்டறியவும். **(07 புள்ளிகள்)**

**<u>வினா இல. 04</u>**

**A). i.** உதாரணங்களைப் பயன்படுத்தி பின்வருவனவற்றை வேறுபடுத்திக் காட்டவும்,

**a)** நிலையான உள்ளீட்டுக் காரணிகள் (Fixed factor inputs) மற்றும் மாறும் உள்ளீட்டுக் காரணிகள் (variable factor inputs)

**b)** குறுங்கால மற்றும் நீண்ட கால உற்பத்தி (Short and Long Run Production)

**(06 புள்ளிகள்)**

**ii.** குறைந்துசெல்லும் எல்லை விளைவு விதியில் (Law of Diminishing Marginal Returns) / மாறும் அளவுத்திட்ட விளைவு விதியில் (The Law of Variable Proportions) உள்ள அறிவானது, ஒரு உற்பத்தி முகாமையாளர் குறுங்காலத்தில் உத்தம உற்பத்தித் தீர்மானத்தை எட்டுவதற்கு எவ்வாறு உதவும்? விளக்கப்படங்களைப் பயன்படுத்தி விளக்கவும்.

**(08 புள்ளிகள்)**

**B)** விளக்கப்படங்களைப் பயன்படுத்தி நீண்ட கால சராசரி செலவு வளையி (Long Run Average Cost) இன் 'U' வடிவத்திற்கான காரணங்களை இனங்காணவும்.

**(06 புள்ளிகள்)**

**<u>வினா இல. 05</u>**

**A) i.** நிறைபோட்டிச் சந்தைகளையும் (Perfectly Competitive markets) தனியுரிமைபோட்டிச் சந்தைகளையும் (Monopolistically Competitive markets) ஒப்பீடு செய்து வேறுபாடுகளைக் காட்டவும் (Compare and Contrast). **(06 புள்ளிகள்)**

**ii.** நிறைபோட்டிச் சந்தையின் குறுங்கால நிரம்பல் வளையியை (Short Run Supply Curve) விளக்கப்படங்களைப் பயன்படுத்தி விளக்கவும். **(04 புள்ளிகள்)**

**B) i.** ஒரு நிறைபோட்டி நிறுவனம், குறுங்காலத்தில் அதன் அலகு விலை அதன் எல்லைச் செலவுக்கு (P=MC) சமமாக இருக்கும் புள்ளியில் தனது இலாபத்தை உச்சப்படுத்த முடியுமா? விளக்கப்படங்களைப் பயன்படுத்தி விளக்கவும். **(05 புள்ளிகள்)**

**ii.** தனியுரிமை போட்டிச் சந்தைகளில் உள்ள நிறுவனங்களுக்கு, விலை சாரா போட்டி முறைகள் (Non- Price Competitive Methods) எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தவை என்பதை உதாரணங்களுடன் விளக்குக. **(05 புள்ளிகள்)**

__வினா இல. 06__

**A). i.** தனியுரிமையின் (Monopoly) நன்மைகள் மற்றும் தீமைகளை இனங்காணவும்.

**(05 புள்ளிகள்)**

**ii.** "ஒரு தொழில்துறையில் ஒரே ஒரு நிறுவனமாக இருப்பதால், தனியுரிமை நிறுவனங்கள் குறுங்காலத்தில் ஒருபோதும் நட்டத்தைச் சந்திப்பதில்லை" இதை நீங்கள் ஏற்கிறீர்களா? விளக்கப்படங்களைப் பயன்படுத்தி விளக்கவும். **(05 புள்ளிகள்)**

**B) i.** சிலருரிமைச் சந்தைகளில் (Oligopolistic markets) உள்ள நிறுவனங்கள் 'சுதந்திரமானவையா' (Independent) அல்லது 'சார்புடையவையா' ? (Interdependent) உதாரணங்களைப் பயன்படுத்தி விளக்கவும். **(06 புள்ளிகள்)**

**ii.** இலங்கையின் இயற்கை எரிவாயுத் (Natural Gas) துறையின் சந்தைக் கட்டமைப்பை (Market Structure) நீங்கள் எவ்வாறு வகைப்படுத்துவீர்கள்? உங்கள் விடையை நியாயப்படுத்தவும்.

**(04 புள்ளிகள்)**

- முழு பதிப்புரிமையுடையது -